1970 மார்ச் 2]

மொத்த விலையில் 4 சதவிகிதம் குறைவான விலைக்கு இங்கு காய் கறிகள் வாங்குபவர்களுக்குக் கொடுக்கப்படும். விடுதியின் முன்னால் இருக்கிற காய்கறித் தோட்டத்தின் வரவு செலவு பற்றிய விவரம் தற்சமயம் என் கைவசம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்: சட்டமன்ற உறுப்பி னர்கள் விடுதிக்கு எதிர்ப்புறமுள்ள காய்கறித் தோட்டத்திற்குப் போடப்பட்டுள்ள முள்வேலி, கம்பம் இவற்றிற்கான செலவிற் காவது அது சம்பாதித்துக் கொடுக்குமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கேள்வி, 'காய்கறி விற்பனைச் சங்கம் ஒன்றை அமைக்க அரசு கருதி யுள்ளதா?' என்பதாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு முன் உள்ள காய்கறித் தோட்டத்தைப் பற்றியதல்ல. ஆகவே அது குறித்துத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அத்தனையும் சேகரித்துத் தரப்படும்.

அரிசி ஆலைகளுக்கான அனுமதிகளை எதிர்த்து ரிட் மனுக்கள்

***159 வினா—திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

1968-ம் ஆண்டில் அரிசி ஆலைகள் துவக்குவதற்கு கொடுத்த அனுமதியை எதிர்த்து எத்தனை ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: முப்பது.

மதுரை பால்பண்ணைத் திட்டத் தொழிலாளர்கள்.

***160 வினா—திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வார விடுமுறை, 8 மணி நேர வேலை, வருடாந்திர லீவு வசதிகள் கேட்டு, மதுரை பால்பண்ணைத் திட்டத் தொழிலாளர் களிடமிருந்து 1–9–1968-ம் தேதியிட்ட மனு ஒன்று பால்திட்ட ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் அம்மனுவின்மீது எடுக்கப்பட்ட நட வடிக்கை யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இம்முறையீடு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. என். சங்கரய்யா: இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த மனு அவர்களால் கொடுக்கப்பட்டும் இந்த ஆரம்ப உரி மைகள், வார விடுமுறை, எட்டு மணி நேர வேலை போன்றவை பரி சீலிக்கப்பட்டு அவர்களுக்கு அந்த உரிமைகள் வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வார விடுமுறை, எட்டு மணி நேர வேலை குறித்து அரசாங்கம் ஏற்கெனவே ஒத்துக் கொண்டு ஆணை பிறப்பித்து விட்டது. பாக்கியுள்ள கோரிக்கைகள் பலவற்றை ஒத்துக்கொண்டிருக்கிறது. மிச்சமுள்ளவை ஆய்வில் இருக்கின்றன.

கைத்தறித் துணிக்குப் பயன்படும் சாயம்

161 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-68, 1968-69-ம் ஆண்டுகளில் கைத்தறித் துணிக்குப் பயன்படும் 'சாயம்' வெளி நாடுகளிலிருந்து எவ்வளவு ரூபாய்க்குத் தமிழ்நாடு அரசால் இறக்குமதி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சாயங்களும், ரசாயனப் பொருள்களும் அரசினால் நேரடியாக இறக்குமதி செய்யப்படுவதில்லை. ஆனால் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு நிலையம், கைத்தறி இயக்குநரின் முகவராகப் பணியாற்றி, இப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாயப் பொருள்கள், ரசாயனப் பொருள்களின் விலை காப்புறுதி—சரக்குக் கட்டணத்தின் மதிப்பு முறையே 18.74 லட்சம் ரூபாய், 72.45 லட்சம் ரூபாய் ஆகும்.

162 **வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளிலிருந்து தமிழ்நாடு அரசு இறக்குமதி செய்யும் சாய விநியோகத்தைத் தடை செய்து 1968 டிசம்பர் 3-வது வாரத்தில் சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தச் சாயம் இறக்குமதி செய்கிற உரிமையைக் கூட்டுறவு சங்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கொடுத்ததால்தான் இதுமாதிரி தடை உத்தரவு செய்யப்பட்டது என்பது அவருக்குத் தெரியுமா? அப்படிக் கொடுக்கவேண்டிய அவசியம் என்னவென்று விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சாயம் இறக்குமதி செய்வதற்கு யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் சார்பில், டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூம்ஸ் சார்பில், ஸ்டேட் சொஸைட்டி ஏஜென்ட் என்ற முறையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. ஸ்டேட் சொஸைட்டிதான் இறக்குமதி செய்கிறது. வேறு யாரும் இறக்குமதி செய்யவில்லை.